முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1680

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.05.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. கலியுகத்தின் ஞானியே அரங்கா
   கலி இடரை வெல்ல வந்த ஞான தேசிகா
   அழியாமை உலகோர்க்கும் தந்தருள்வேன் என
   அவதாரம் எடுத்து வந்த குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 22 ம் நாள், 05.05.2024, ஞாயிற்றுக்கிழமை)
   வரமாக உன்னுள் யானே இருந்து
   வருவோர்க்கு தீட்சையாக அருளி வருகின்றேன்
3. வருகின்ற அன்பர்கள் அத்துனைபேருமே
   வல்லமைபட அரங்கன் உன் குடில் தொடர்பால்
   தருகின்ற குணம் மிக்கவர்களாக மாறி
   தரணியில் தர்மத்தை காக்க நேரும்
4. நேர்மைகொண்டு உன் தீட்சை ஏற்று
   நிலவுலகில் ஞானிகள் பூஜை செய்பவர்க்கெல்லாம்
   ஆறுமுகன் யான் சூட்சுமமாக காட்சித் தந்து
   அவர்களோடு அண்ணவர்கள் குடியவர்க்கும்
5. ஆக்கமும் ஞானமும் அரங்கன்
   உன் சக்தியாக நிரம்பி யானே
   யானே அற்புதத்தை நடத்துவேன்
   ஞான உலகம் படைக்கும் மகா சக்திதயாக
6. தானதர்மத்தை வளர்த்துவரும் அரங்கன் நீ
   தனிப்பெரும் கருணைமிக்க கலியுக ஞானியாக
   ஆகவே அரங்கனே உமக்கும் ஆற்றல் கூட்டுவேன்
   அரங்கன் ஓங்காரக்குடிலுக்கும் சக்தி பெருக்கி

7. பெருக்கியே அரங்கன் தொடர்பில் தர்மத்தை வளர்க்கும்
பேருலக மாந்தர்கள் யாவர்க்குமே ஆற்றல்கூட்டி ஆறுமுகன் யான்
அழியாமை தந்து அரங்கன் வழி உலகோரெல்லாம்
ஞானிகள் ஆவதர்க்கு அற்புதம் நிகழ்த்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–